*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

**தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref | Google Scholar
SJIFImpact Factor3.5| Multidisciplinary
Article DOI: https://doi.org/10.63300/tm12022026.27

# Tamil Inscriptional Poetry and Recent Discoveries – A Review

**M. Palanikumar[1*], Dr. R. Govindaraj[2],**
[1]Ph.D. Research Scholar, Tamil Higher Research Centre,
Thiagarajar College, Madurai-09, Thiagarajar College, Madurai-09
[2]Supervisor & Assistant Professor, Tamil Higher Research Centre, Thiagarajar College, Madurai-09
[*]Corresponding Author Email: palanikumar030995@gmail.com.

**Article Info**
Received on 27-June-2026, Revised on 29-June-2026, Accepted on 29-June-2026, Published on 10-July-2026

## ABSTRACT

The Tamil community has lived in adherence to a poetic tradition since ancient times. Songs and poems have held a significant place across various stages of human life, from birth to death. As a continuation of this very tradition, messages have also been inscribed in poetic form on Tamil inscriptions. Although numerous inscriptions have been discovered in Tamil Nadu, poetic inscriptions are relatively few in number.

During a recent field study, two new poetic inscriptions were discovered:

- The Hero Stone Inscription: One of the discoveries is a hero stone (nadukal) inscription dedicated to warriors. It records the glory of a warrior who attained martyrdom in battle, written with literary flair in a poetic format. Based on current research, this is considered to be only the second poetic hero stone inscription discovered in Tamil Nadu.
- The Sluice Pillar Inscription: The second inscription is associated with a sluice pillar (madaithoombu). Written in verse, it highlights the importance of water resources, the preservation of irrigation systems, and the nobility of public welfare work.

Consequently, these two poetic inscriptions serve as rare historical evidence reflecting the heroic tradition, literary heritage, water management philosophy, and social culture of the Tamils. Furthermore, they stand as an important research contribution that adds fresh data to the history of Tamil inscriptional poetry.

***KEYWORDS:*** *Tamil Inscriptional Poetry, Hero Stone (Nadukal), Sluice Pillar (Madaithoombu), Water Management, Epigraphy.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 02 (July-2026)*
www.tamilmanam.in *DOI:* *https://doi.org/10.63300/tm12022026*

# தமிழகப் பாடல் கல்வெட்டுகளும் அண்மைக்காலக் கண்டுபிடிப்புகளும் – ஒரு மீள்பார்வை

[1]**மு.பழனிக்குமார்**, முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் உயராய்வு மையம், தியாகராசர் கல்லூரி, மதுரை-09
[2]**முனைவர். ரே.கோவிந்தராஜ்**, நெறியாளர், உதவி பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம், தியாகராசர் கல்லூரி, மதுரை-09

**ஆய்வுசுருக்கம்**

தமிழ்ச் சமூகம் தொன்றுதொட்டு பாடல் மரபைப் பின்பற்றி வாழ்ந்து வந்துள்ளது. பிறப்பு முதல் இறப்பு வரை மனித வாழ்வின் பல்வேறு நிலைகளிலும் பாடல்கள் முக்கிய இடம் பெற்றுள்ளன. அந்த மரபின் தொடர்ச்சியாகவே தமிழ் கல்வெட்டுகளிலும் பாடல் வடிவில் செய்திகள் பொறிக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் ஏராளமான கல்வெட்டுகள் கண்டறியப்பட்டிருந்தாலும், பாடல் கல்வெட்டுகள் எண்ணிக்கையில் குறைவாகவே உள்ளன. கள ஆய்வின்போது இரண்டு புதிய பாடல் கல்வெட்டுகள் கண்டறியப்பட்டன. அவற்றில் ஒன்று வீரர்களுக்கான நடுகல் கல்வெட்டாகும். இதில், போரில் வீரமரணம் அடைந்த ஒரு வீரனின் பெருமை இலக்கிய நயத்துடன் பாடல் வடிவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போதைய ஆய்வின் அடிப்படையில், தமிழகத்தில் கண்டறியப்பட்டுள்ள பாடல் வடிவிலான நடுகற்களில் இதுவே இரண்டாவது கல்வெட்டாக கருதப்படுகிறது. மற்றொரு கல்வெட்டு, மடைத்தூம்புடன் தொடர்புடையதாகும். இதில் நீர்வளத்தின் முக்கியத்துவம், நீர்ப்பாசன அமைப்புகளின் பாதுகாப்பு மற்றும் பொதுநலப் பணியின் சிறப்பு ஆகியவை பாடல் வடிவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. எனவே, இவ்விரு பாடல் கல்வெட்டுகளும் தமிழரின் வீரமரபு, இலக்கிய மரபு, நீர்மேலாண்மைச் சிந்தனை மற்றும் சமூகப் பண்பாட்டை வெளிப்படுத்தும் அரிய வரலாற்றுச் சான்றுகளாக விளங்குகின்றன. மேலும், தமிழகப் பாடல் கல்வெட்டுகளின் வரலாற்றில் புதிய தரவுகளைச் சேர்க்கும் முக்கியமான ஆய்வுப் பங்களிப்பாகவும் இவை அமைகின்றன.

**முன்னுரை**

தமிழக வரலாற்றை மீட்டுருவாக்குவதில் கல்வெட்டுகள் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றன. குறிப்பாக, பாடல் வடிவில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் வரலாறும் இலக்கியமும் இணைந்த அரிய ஆவணங்களாகக் கருதப்படுகின்றன. பொதுவாக கல்வெட்டுகள் உரைநடை வடிவில் காணப்பட்டாலும், சில கல்வெட்டுகள் **வெண்பா, கட்டளைக் கலித்துறை , ஆசிரியப்பா, கலிப்பா, எண்சீர் சந்தவிருத்தம், அறுசீர்விருத்தம், கலிவிருத்தம், பன்னிரு சீர் விருத்தம், சீர் கலிநெடில் ஆசிரியர் விருத்தம், விருத்தம், எழுசீர் விருத்தம்** போன்ற செய்யுள் வடிவங்களில் அமைந்துள்ளன. இவ்வகைக் கல்வெட்டுகள் பாடல் கல்வெட்டுகள் என அழைக்கப்படுகின்றன.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 02 (July-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12022026*

இவை அரசர்களின் **வீரச்செயல்கள், கோயில் திருப்பணிகள், தானங்கள், சமயப் பணிகள் மற்றும் சமூக நிகழ்வுகளை** இலக்கிய நயத்துடன் பதிவு செய்துள்ளன. எனவே பாடல் கல்வெட்டுகள் வரலாற்றுத் தரவுகளாக மட்டுமன்றி, தமிழ் இலக்கிய மரபின் வளர்ச்சியையும் எடுத்துக்காட்டும் முக்கிய ஆவணங்களாக விளங்குகின்றன.

**பாடல் கல்வெட்டுகளின் தன்மை**

இப்பாடல் கல்வெட்டுகள் தமிழகத்தில் பல்லவர் காலத்திலிருந்து தெளிவாகக் காணப்படுகின்றன. பின்னர் **மலையமான், முத்தரையர், சோழர், பாண்டியர், விஜயநகரர், சம்புவராயர்கள், தொண்டைமான்கள், வாணர்கள் மற்றும் நாயக்கர்,** காலங்களில் இம்மரபு வளர்ச்சி பெற்றது. அரசர்களின் புகழையும் வெற்றிகளையும் மக்களிடையே நிலைநிறுத்தும் நோக்கில் கல்வெட்டுகளில் செய்யுள் வடிவம் பயன்படுத்தப்பட்டது. இதன் விளைவாக கல்வெட்டுகள் வெறும் நிர்வாக ஆவணங்களாக இல்லாமல், இலக்கியப் படைப்புகளின் தன்மையையும் பெற்றன. கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ள செய்யுட்கள் அக்காலப் புலவர்களின் மொழிநடை, இலக்கியத் திறன் மற்றும் கவிதை மரபுகளை வெளிப்படுத்துகின்றன.

இந்த கல்வெட்டுகளின் உள்ளடக்கத்தை ஆராயும்போது, அவை பெரும்பாலும் அரசர்களின் வெற்றிகளையும் வீரச்செயல்களையும் மையமாகக் கொண்டிருப்பதை அறிய முடிகிறது. **ஒரு அரசன் வென்ற நாடுகள், போர்க்களச் சாதனைகள், கோயில் கட்டுமானங்கள்**, வழங்கிய தானங்கள் மற்றும் சமயப் பணிகள் ஆகியவை பாடல் வடிவில் பதிவு செய்யப்பட்டுள்ளன. சில கல்வெட்டுகள் குறிப்பிட்ட கோயிலின் சிறப்புகளையும், அங்கு நடைபெற்ற திருப்பணிகளையும், இறைபக்தியையும் எடுத்துரைக்கின்றன. இதன் மூலம் அரசியல் மற்றும் சமய வரலாற்றை ஒருங்கிணைந்த முறையில் அறிந்து கொள்ள முடிகிறது. **நரேந்திரப் போத்தரையன் என்பது முதலாம் மகேந்திரவர்மன் உடைய சிறப்புப் பெயர். இவன் கி.பி. 600 முதல் 630 வரையில் அரசாண்ட பல்லவ அரசன். முதன் முதலாகத் தமிழ்நாட்டிலே பாறைகளைக் குடைந்து குகைக் கோயில்களை அமைத்தவன் இவனே. வெண்பேடு இப்போதுள்ள தளவானூருக்குப் பழைய பெயர். சத்துரு மல்லன் என்பதும் முதலாம் மகேந்திரவர்மனுடைய பெயர்.**[1] சமயப்பணிக்காக பல்லவ மன்னன் கோயில் கட்டியுள்ள செய்தியை இந்த பாடல் கல்வெட்டு நமக்கு உணர்த்துகின்றது.

சோழர் காலத்தில் பாடல் கல்வெட்டுகள் மிகுந்த வளர்ச்சியை அடைந்தன. குறிப்பாக **முதலாம் இராசராச சோழன், முதலாம் இராஜேந்திர சோழன், குலோத்துங்க சோழன்** போன்ற அரசர்களின் கல்வெட்டுகளில் மெய்க்கீர்த்திகள் இடம்பெற்றுள்ளன. மெய்க்கீர்த்திகள் என்பது அரசர்களின் சாதனைகள் மற்றும் வெற்றிகளைப் பாடல் வடிவில் எடுத்துரைக்கும் வரலாற்றுப் பதிவுகளாகும். தஞ்சாவூர் பெரியகோயில், கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம் மற்றும் திருவாரூர் போன்ற கோயில்களில் காணப்படும் கல்வெட்டுகள் சோழப் பேரரசின் அரசியல் ஆற்றல், நிர்வாகத் திறன் மற்றும் சமய ஆதரவைப் பற்றிய முக்கிய தகவல்களை வழங்குகின்றன.

கல்வெட்டுப்பாடல்கள் சிறந்த எடுத்துக்காட்டுகளாக திருவெள்ளறை கல்வெட்டு, குடுமியான் மலை கல்வெட்டு, திருவண்ணாமலை கல்வெட்டுகள் மற்றும் கன்னியாகுமரி மாவட்டக் கல்வெட்டுகள் குறிப்பிடப்படுகின்றன. திருவெள்ளறை கல்வெட்டில் இடம்பெற்றுள்ள செய்யுட்கள்

அக்காலச் சமூக மற்றும் சமயச் சூழலை வெளிப்படுத்துகின்றன. குடுமியான் மலையில் காணப்படும் கல்வெட்டு இசை மற்றும் கலை வரலாற்றிற்கான முக்கிய ஆதாரமாகக் கருதப்படுகிறது. திருவண்ணாமலை கல்வெட்டுகள் சம்புவராயர் மற்றும் விஜயநகரர் கால வரலாற்றுச் செய்திகளை பதிவு செய்துள்ளன. அரசியல், சமய மற்றும் சமூகம் வளர்ச்சியையும் வெளிப்படுத்துகின்றன. **காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலில் உள்ள சுப்பிரமணியர் கோயில் மேற்கு, தெற்குச் சுவர்களில் காணப்படும் பாடல் கல்வெட்டுகள். திருமால் மாவலிவாணன் போரில் பாண்டியர், சோழர், சேரர் ஆகியவர்களை வெற்றிகொண்ட பெரும் சிறப்புக் கூறப்படுகிறது.**[2] மன்னர்களின் போரின் வெற்றியை உணர்தும் வகையில் அமைந்துள்ளது.

தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை மற்றும் இந்திய கல்வெட்டு ஆய்வுத் துறை மேற்கொண்ட ஆய்வுகளின் மூலம் பல புதிய பாடல் கல்வெட்டுகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. **திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், காஞ்சிபுரம், தஞ்சாவூர், அரியலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி, விருதுநகர், ஈரோடு** ஆகிய மாவட்டங்களில் கண்டறியப்பட்ட கல்வெட்டுகள் தமிழக இடைக்கால வரலாற்றை மேலும் தெளிவுபடுத்தியுள்ளன. குறிப்பாக கோயில்களில் அதிட்டானம், ஜகதி, குமுதம், பாதசுவர்களில் மற்றும் தனிகற்களில் கண்டறியப்பட்ட கல்வெட்டுகள் புதிய வரலாற்றுத் தகவல்களை வழங்கியுள்ளன.

தமிழக வரலாற்று ஆய்வில் தனித்துவமான இடத்தைப் பாடல் கல்வெட்டுகள் பெற்றுள்ளன. இவை அரசியல் நிகழ்வுகளை மட்டும் பதிவு செய்யாமல், அக்கால சமூக வாழ்க்கை, பொருளாதார நிலை, சமய வளர்ச்சி, கலை மற்றும் இலக்கிய மரபுகளையும் வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக தமிழ் மொழியின் வளர்ச்சி, செய்யுள் மரபுகள் மற்றும் இலக்கியப் பயன்பாடு ஆகியவற்றை அறிந்து கொள்ள இக்கல்வெட்டுகள் இன்றியமையாத ஆதாரங்களாக உள்ளன. சமூக வாழ்க்கைக்கு நீரின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் **சடையமாறனின் பதினாறாம் ஆட்சியாண்டில் இருப்பைக்குடிக் கிழவன், குளத்தின் பழைய கரையை அகற்றிக் கல்லால் கரை அமைத்து மடையும் உண்டாக்கினான். கிழவன் ஏரி என்று பெயரிட்டான்.** [3] என்பதை இந்த பாடல் கல்வெட்டின் மூலம் அறியமுடிகின்றது.

எனவே தமிழகப் பாடல் கல்வெட்டுகள் வரலாற்று மற்றும் இலக்கிய ஆய்வுகளுக்கான அரிய ஆவணங்களாகக் கருதப்படுகின்றன. அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள் தமிழக வரலாற்றின் பல புதிய அம்சங்களை வெளிப்படுத்தியுள்ளன. இதனால் பாடல் கல்வெட்டுகளை முறையாகப் பாதுகாத்து, படியெடுத்து, மொழிபெயர்த்து, ஆய்வு செய்து வெளியிடுவது அவசியமாகிறது. எதிர்கால ஆய்வுகள் மேலும் பல புதிய பாடல் கல்வெட்டுகளை வெளிக்கொண்டு வந்து தமிழகத்தின் தொன்மை மற்றும் பண்பாட்டு வரலாற்றை செழுமைப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

**களாய்வின் மூலம் கிடைத்த பாடல் கல்வெட்டுக்கள்**

தமிழகத்தில் இதுவரை 200-க்கும் மேற்பட்ட பாடல் கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன. இந்த எண்ணிக்கை முந்தைய ஆய்வாளர்கள் மேற்கொண்ட களஆய்வுகள் மற்றும் வெளியிடப்பட்ட

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI:* https://doi.org/10.63300/tm12022026

கல்வெட்டுத் தொகுப்புகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்டதாகும். இருப்பினும், இதுவே இறுதியான எண்ணிக்கையாகக் கருத முடியாது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் தொல்லியல் மற்றும் கல்வெட்டியல் களஆய்வுகளின் மூலம் புதிய பாடல் கல்வெட்டுகள் அவ்வப்போது கண்டறியப்பட்டு வருகின்றன. எனவே, பாடல் கல்வெட்டுகளின் மொத்த எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாய்வின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்ட களஆய்வுகளில் இதுவரை அறியப்படாத வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த **இரு பாடல்** கல்வெட்டுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

### 1. குருவிக்குளம் பாடல் கல்வெட்டு

| | |
|---|---|
| **மாவட்டம்** | தொன்காசி |
| **வட்டம** | திருவேங்கடம் |
| **ஊர்** | குருவிக்குளம் |
| **மொழி** | தமிழ் |
| **எழுத்து** | வட்டெழுத்து |
| **காலம்** | பொ.ஆ 9,10 (மாறுதலுக்கு உட்பட்டது) |
| **இடம்** | குருவிக்குளம் ஊரின் தெற்கு பக்கமாக அமைந்துள்ள கருப்பசாமி கோயிலுக்கு அருகில் உள்ள ஏரியின் மையத்தில் இந்த கல்வெட்டு அமைந்துள்ளது. |

**கல்வெட்டு பாடம்**

1. ஸ்ரீ மெ
2. னெச்
3. சி மெ
4. ல் வீ
5. ரவர் வெல்ல விரைந்தெதிரெய்
6. மெனெச்சிக்கொன் ஆலவன் மீ-
7. க்க புகரழுத்தானுற்றுச் செ
8. ஞ்சரைஊன் செலுத்திச்
9. செந்தவீரன் விண்ணுல
10. கம் புக்கன் மலர்தும்

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 12, Issue 02 (July-2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

11. பபொய் II-
12. இது
13. உதி
14. ரப்
15. படி

**கல்வெட்டு விளக்கம்**

இக்கல்வெட்டு வீரக்கல்லில் பொறிக்கப்பட்ட பாடல் கல்வெட்டாகும். இதில் **"மெனெச்சிக்கோன் ஆலவன்"** என்ற வீரன் பகைவர்களை எதிர்த்து வீரத்துடன் போரிட்டு உயிர் நீத்த செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. போரில் வீரமரணம் அடைந்ததால் அவர் விண்ணுலகம் (வீரசுவர்க்கம்) அடைந்ததாகக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. மேலும், அவரது வீரத்தைப் போற்றும் வகையில் **"உதிரப்படி"** என்ற கொடை வழங்கப்பட்டதாக இறுதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு அக்கால வீரமரபு, வீரவழிபாடு மற்றும் வீரர்களுக்காக வழங்கப்பட்ட நினைவுக் கொடை மரபை வெளிப்படுத்தும் முக்கியமான வரலாற்றுச் சான்றாகும்.




**2.பழங்கோட்டை பாடல் கல்வெட்டு**

| | |
|---|---|
| **மாவட்டம்** | தொன்காசி |
| **வட்டம** | சங்கரன்கோயில் |
| **ஊர்** | பழங்கோட்டை |
| **மொழி** | தமிழ் |
| **எழுத்து** | வட்டெழுத்து |

, | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 02 (July-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12022026*

**காலம்** பொ.ஆ 9,10 (மாறுதலுக்கு உட்பட்டது)

**இடம்** பழங்கோட்டை ஊரின் தெற்கு பக்கமாக உள்ள ஏரியின் கரையில் மைந்துள்ள தூம்பு இந்த கல்வெட்டு அமைந்துள்ளது.

**கல்வெட்டு பாடம்**

1. **ஸ்ரீ இப்புனல் கரை வியச்சூரி சங்குழற்றின்று ஆப்பரந்**
2. **துனென் கொழிக்கு நெச்சியர் கொன் மாப்பலகை முன்பொக நின்**
3. **ற முனையடக்கி செய்வித்த முன்பொக நின்ற மடைய் ll-**

**கல்வெட்டு விளக்கம்**

இக்கல்வெட்டு ஒரு நீர்நிலை அல்லது ஆற்றங்கரையுடன் தொடர்புடைய பொதுப்பணியைப் பதிவு செய்கிறது**. "இப்புனல் கரை"** என்ற தொடர், நீர்நிலையின் கரையை வலுப்படுத்துதல் அல்லது பாதுகாத்தல் தொடர்பான செயலைக் குறிக்கிறது. "வியச்சூரி சங்குழற்றி" மற்றும் **"நெச்சியர் கொன்"** ஆகியோர் இப்பணியுடன் தொடர்புடைய நபர்களாகத் தெரிகின்றனர். மேலும், "மாப்பலகை" மற்றும் **"முனையடக்கி செய்வித்த"** என்ற தொடர்கள், நீரின் ஓட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்காக அணை, மதகு அல்லது நீர்தடுப்பு அமைப்பு கட்டப்பட்டதைக் குறிப்பிடுகின்றன. எனவே, இக்கல்வெட்டு பொதுநல நோக்கில் மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பாசனப் பணியையும், அதனைச் செய்தவர்களின் நினைவையும் பதிவு செய்யும் வரலாற்றுச் சான்றாகும்.





, | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

**அடிக்குறிப்பு**

1.சாசனச் செய்யுள் மஞ்சரி., பக்,188.

2. தமிழக் கல்வெட்டுப் பாடல்கள்., பக்,41.

3.தமிழக் கல்வெட்டுப் பாடல்கள்., பக்,53.

**துணைநூற்பட்டியல்**


1. சதாசிவப் பண்டாரத்தார், தி.வை. *கல்வெட்டுக்களால் அறியப்பெறும் உண்மைகள்.* சென்னை: கழக வெளியீடு.
2. இராசு,செ. தமிழ்க் கல்வெட்டுக் பாடல்கள் ,கொங்கு ஆய்வு மையம் வெளியீடு
3. வெங்கடசாமி சீனி மயிலை.சாசனச் செய்யுள் மஞ்சர். நாம் தமிழர் பதிப்பகம் வெளியிடு
4. சுப்பிரமணியன், தி.நா. *தமிழகக் கல்வெட்டுகள்.* சென்னை: தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை.
5. சுப்பிரமணியன், தி.நா. *பல்லவர் செப்பேடுகள்.* சென்னை: தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை.
6. நாகசாமி, இரா. *தமிழகக் கோயிற்கலைகளும் கல்வெட்டுகளும்.* சென்னை: தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை.
7. குடவாயில் பாலசுப்பிரமணியம். *கல்வெட்டு சொல்லும் கோயில் கதைகள்.* சென்னை: வெளியீட்டாளர்.
8. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை. *தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்* (பல தொகுதிகள்). சென்னை: தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை.
9. *South Indian Inscriptions*. Archaeological Survey of India, New Delhi.
10. *Epigraphia Indica*. Archaeological Survey of India, New Delhi.
11. *Annual Report on South Indian Epigraphy*. Archaeological Survey of India, New Delhi.
12. K. A. Nilakanta Sastri. *The Cholas*. Madras: University of Madras.
13. K. A. Nilakanta Sastri. *The Pandyan Kingdom*. Madras: Swathi Publications.
14. Noboru Karashima (Ed.). *A Concordance of the Names in the Chola Inscriptions*. Tokyo: The University of Tokyo Press.
15. Burton Stein. *Peasant State and Society in Medieval South India*. Delhi: Oxford University Press.
16. K. V. Subrahmanya Aiyar. *Historical Inscriptions of South India*. Madras: Archaeological Survey of India.


*I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work